ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2356/03 - 2023 ඔක්තෝබර් මස 30 වැනි සඳුදා - 2023.10.30

2356/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தெல்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவில் கலஹா கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க. சீ. 320706 ஆம் இலக்கமுடைய இல. 01 காணித்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணம் 0.0824 ஹெக்டயார் ஆன காணித்துண்டின் விபரம்:

**1. துண்டு இல. 1; காணியின் பெயர்: கலஹா தோட்டம்; உரிமை கோருவோர்: காணி மீள்பரிசீலனை கொமிசன் சபை; விஸ்தீரணம்: 0.0824 ஹெக்டயார்.**

வடக்கு: காணி மீள்பரிசீலனை கொமிசன் சபைக்கு உரித்தான கலஹா தோட்டம் மற்றும் பாதை (RDA); கிழக்கு: பாதை (RDA) மற்றும் நடை பாதை; தெற்கு: நடை பாதை மற்றும் பாதை (பிரதேச சபை); மேற்கு: பாதை (பிரதேச சபை).

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு தெல்தோட்ட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர் களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தை யும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

டீ. ஆர். கே. ஹென்நாயக்க,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்ட.

பிரதேச செயலகம்,
தெல்தோட்ட,
2023, ஒற்றோபர் 25.

EOG 10 - 0295

1A - G 40632 - 21 (2023 /10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*